நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper | பக்கங்கள் 06 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | தை 26 | (08-02-94) | செவ்வாய்க்கிழமை | ஓசை 355

## இலவச பாடப்புத்தகங்கள் விநியோகிக்க நடவடிக்கை

இம் முறை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ள இலவசப் பாட நூல்களை பாடசாலைகளுக்குவழங்க யாழ். கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் முதற் கட்டமாக யாழ் மாவட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும் தேவையான பாட நூல்களின் அளவை அந்தந்த பாடசாலைகளுக்குப் பொறுப்பாக உள்ள கோட்டங்களிடம் இருந்து பெற்று அதன் அடிப்படையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் கப்பலில் இருந்து மேற்படி நூல்கள் இறக்கப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவந்து சேர்க்கப்பட்டதும் விநியோகம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

# பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண அரசிற்கு அக்கறை எதுவுமில்லை

## அமெரிக்க அகதிகள் அமைப்பு குற்றச்சாட்டு

[வாஷிங்டன்]

"சிறிலங்கா அரசாங்கமோ, அன்றி அரசியல்கட்சிகள் உட்பட ஏனைய அமைப்புக்களோ பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதில் விருப்பமற்றவர்கள் போன்றே உள்ளனர்". இவ்வாறு 'அகதிகள் நல அமைப்பு' என்னும் அமெரிக்க குழுவொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான போரிற்கான மூலகாரணத்தைக் கண்டறிவதன் மூலமே நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். ஆனால் அண்மைக்காலமாக போர் தீவிரமாகிவிட்டது. இருதரப்பினரதும்மனப்போக்கும் தனித்தனியாகிவிட்டது. முன்னெப் போதையும் விட இப்போது அமைதி எட்டாக் கனியாகிவிட்டது என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

தென்னிலங்கையில் பத்தாண்டுகளாக நடக்கும் இப்போரை நிறுத்த விருப்பம் இருப்பதாக தெரியவில்லை. போரின் காரணங்களை அகற்றவோ, அமைதித் தீர்வு காணவோ அரசும், அதன் படைகளும், எதிர்க்கட்சிகளும், பொதுவாக மக்களுமே ஆர்வம் காட்டவில்லைபோல் தெரிகிறது எனவும் இந்த அமெரிக்க அகதிகள் நலன் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## யுத்தம் பூதாகரமாக வெடித்ததற்கு தமிழர்கள் காரணமானவர்களல்ல

### சிங்கள விரிவுரையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

"தற்போதைய யுத்தம் இந்தளவிற்கு பூதாகரமாக வெடித்தமைக்கு காரணமானவர்கள் தமிழர்கள் அல்ல, இனவாதம் கொண்ட பெரும்பான்மை ஆட்சியாளர்களே தமது உரிமைகளைப் பெற தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்துச்செல்லும் போராட்டத்தை அரசாங்கம் வன்செயல் எனக் கூறுவது இயல்பாகி விட்டது. வட-கிழக்கில் நிலவுவது வன்செயல் எனக் கூறப்படுகிறது. இவ்வாறான கருதுவது அவரவர் எண்ணக் கருவூலமாகும்." இவ்வாறு பேராதனைப்பல்கலைக்கழக சிங்களப்பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் அநுராத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள தினசரி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறுதெரிவித்தார். சிங்களப் பாடசாலைகளில் இனவாத உணர்வு ஊட்டப்படுகிறது. சிங்களமாணவர்களுக்கு வரலாற்று இவன் வருகைக்கு முன்பே இங்கு திராவிட இனம் வசித்து வந்தது பற்றி எதுவும் கூறப்படவில்லை.

தமிழர் கலை கலாசாரத்திலிருந்து பௌத்த கலாசாரம் பெற்றவடிவமைப்புகளை சிங்கள மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விளக்கமாக கற்பிக்க வேண்டும். இதற்கு மாறாக யுத்தம் மூலம் பிரச்சினையை தீர்க்க

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## நனைந்த தபால்கள்

(வடமராட்சி)

'மாகோ' கப்பலில் இம்முறை வந்த தபால் பொதிகளில் வெளிநாட்டுத்தபால்களும், பதிவுத் தபால்களும் அடங்கியுள்ளன. இக்கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 291 தபால் பொதிகளும் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் கரைக்கு வந்து சேர்ந்தன.

பின்னர்வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கரவெட்டி தபாலகங்களுக்குரிய தபால்

(5ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. காவை பிளவுபடுத்திவிட்டு காமினி ஐ. தே. கவில் சேர்ந்துவிட்டார்

### செல்லச்சாமி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசில் பிளவை ஏற்படுத்தி விட்டு காமினி ஆளும்கட்சியில் சேர்ந்து விட்டார். நம் மக்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டார் என இ. தொ. கா. பொதுச் செயலர் எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார். ஹட்டனில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மலையக மக்களின் வேலை நாள், வீடு, காணி, கல்வி என எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இவற்றிற்கு தீர்வு காணாமல் காமினி திசநாயக்காவின் பிரச்சினையை பிடித்துக்கொண்டு பலப்பரீட்சையில் இறங்கியுள்ளோம். இதனால் எமது மக்களுக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் எந்த நன்மையும் இல்லை. காங்கிரசின் அலுவலகங்கள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. ஸ்தாபனம் ஸ்தம்பித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக காங்கிரசில் நிதிநிலை சீராக இல்லை. கணக்குவழக்கு சீராக இல்லை. இதனைச்சுட்டிக் காட்டினேன். சிலருக்கு இது பிடிக்கவில்லை. கணக்கா கேட்கிறாய் உன் கணக்கைத் தீர்த்துவிடுகிறோம் என்று சங்கணம் கட்டி செயற்படுகின்றனர் எனவும் செல்லச்சாமி மேலும் தெரிவித்தார்.

## லலித்தின் மெய்க்காவலர் காமினியின் மகனால் கைது

காமினி திசநாயக்காவுக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் காமினி திசநாயக்காவின் மகனான நவீனின் மெய்ப்பாதுகாவலரால் கைதுசெய்யப்பட்டு கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

காமினி திசநாயக்காவின் மகன் நவீன் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது கொழும்பு நகரசபைக்கு அண்மையில் வைத்து இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டனர். திசநாயக்காவிற்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தனர் எனவும், சுவரொட்டி ஒட்டியவர்களில் ஒருவர் அத்துலத்முதலியின் மெய்ப்பாதுகாவலர் எனவும் மற்றவர் அவரின் அலுவலகத்தில் வேலை செய்பவரெனவும் தெரியவருகிறது.

## கசிப்பு உற்பத்திக்கு தண்டனை விதிப்பு

யல் எனக் கூறுவது இயல பாகி விட்டது. வட-கிழக்கில் நிலவுவது வன்செயல் எனக் கூறப்படுகிறது. இவ்வாறான ஒரு புண் ஏன் ஏற்பட்டது என்பதை சிந்திக்கவேண்டும். இதனை வன்செயல் என்று

வித்தார். சிங்களப் பாடசாலைகளில் இனவாத உணர்வு ஊட்டப்படுகிறது. சிங்களமாணவர்களுக்கு வரலாற்று நூல் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு அதில் விஜயன் வருகைபற்றிக்கூறப்படுகிறது.

மாக கற்பிக்க வேண்டும். இதற்கு மாறாக யுத்தம் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியும் என எண்ணுவது தவறாகும் எனவும் அவர் கூறினார்.

நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொண்டிருந்தபோது கொழும்பு நகரசபைக்கு அண்மையில் வைத்து இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் காமினி

# பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை குறித்து அரசு மறுபரிசீலனை

## சண்டே ரயிம்ஸ் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை என்ற நிபந்தனையைக்கைவிட சிறிலங்கா அரசு ஆலோசித்து வருவதாக 'சண்டே ரயிம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் இதுவரை காலமும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தை என்ற நிபந்தனை விதித்துவந்தமை தெரிந்ததே. இப்பொழுது இந்நிபந்தனையை கைவிட சிறிலங்கா அரசு ஆலோசித்து வருவதாக செய்திவெளியிடப்பட்டுள்ளது

# 513 தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தமிழகத்திலிருந்து மற்றுமொரு தொகுதி இலங்கை அகதிகள் மன்னார் வந்து சேர்ந்தனர். 513 அகதிகள் இத்தொகுதியில் அடங்கியிருந்தனர். இதுவரையில் தாயகம் திரும்பியநான்குதொகுதிகளில் வந்த அகதிகளின் எண்ணிக்கை 2030 எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள்.

இந்தியக்கப்பலான இராமானுஜம் கப்பல் மூலம் நேற்றுக்காலை மேற்படி 513 அகதிகளும் வந்து சேர்ந்தனர். இதேசமயம் 500 பேர்

(5ஆம் பக்கம் பார்க்க)

# மேற்கு ராஜதந்திரிகள் அகதிகளை சந்தித்தனர்

(கொழும்பு)

நேற்று இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளைப் பார்வையிட கொழும்பில் உள்ள சில வெளிநாட்டு ராஜதந்திரிகளும் தலைமன்னார் வந்திருந்தனர். சுவிற்சர்லாந்து தூதுவர், ஜேர்மன் தூதரக ஆலோசகர், கனேடிய தூதரக முதற் செயலாளர் ஆகியோர் யூ. என். எச். சீ. ஆர். வதிவிடப் பிரதிநிதியுடன் தலைமன்னார் வந்திருந்தனர்.

இக்குழுவினர் அகதிகள் திருப்பியனுப்பப்படும் நடவடிக்கையை நேரில் சென்று பார்வையிட்டனர். அகதிகளை திருப்பியழைத்து வரும் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் 15 நாடுகளில் சுவிஸ், ஜேர்மனி. கனடா ஆகிய நாடுகளும் அடங்குவது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டிஷ் அன்பளிப்பு உபகரணங்கள்

# மேலும்பலகொள்கலன்கள் கொழும்பில் தவம்

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவிற்கு பிரிட்டனால் அன்பளிப்புச்செய்யப்பட்ட ஆறு கொள்கலன்கள் கவனிப்பாரற்ற நிலையில் கொழும்பில் தவம்கிடக்கின்றன. மூன்று வருடங்களுக்கு மேலாக இவ் உபகரணங்கள் இந்நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கணிசமான கொள்கலன்கள் எடுத்துவரப்பட்ட போதிலும் இன்னும் சில கொள்கலன்கள் எடுத்துவருவதற்கு யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் முயற்சி எடுத்து வருகிறது. (நி)

# பிரேமதாசாகொலைவழக்கு 4 எதிரிகள் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 9 எதிரிகளில நால்வர் கொழும்பு மேலதிக நீதிவானினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குணசிங்கபுரத்தில் கடை வைத்திருந்த சமன் சுஜீல, ஜனாதிபதியின் வீட்டில் வேலை பார்த்த உஜித்தரணசிங்க, பாபுவின் சகாவான கே. டி. பர்ளேலிஸ், உஜித்தவின் சகோதரர் விதுரணசிங்க ஆகிய நால்வருமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இந்நால்வரினதும் கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு பிரதி ஞாயிறு தோறும் பொலிஸ் நிலையம் சென்று கையெழுத்திட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

# தண்டனை விதிப்பு

சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் கடந்த வாரம், கசிப்பு உற்பத்தி, விற்பனை சம்பந்தமான பல வழக்குகளுக்கு தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

இரண்டரைப் போத்தல் கசிப்பு விற்பனைக்காக கோண்டாவில், பாரதி வீதியைச் சேர்ந்த திருமதி இராசையா மகாலட்சுமி என்பவருக்கு, 23,000 ரூபா குற்றப் பணமாகதீர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டரைப் போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காக ஏழாலை கேணியடியைச் சேர்ந்த கனகலிங்கம் கிளி என்பவருக்கு 20,000 ரூபா குற்றப்பணமாக விதிக்கப்பட்

(5ஆம் பக்கம் பார்க்க)

# வை. கோவை பயங்கரவாதியாக்க கருணாநிதி முயல்கிறார்

(சென்னை)

இலங்கை அரசு உளவுத்துறை சில தமிழ்க்குழுக்களை தயார் செய்து என்னைக் கொலை செய்ய இந்தியா வந்துள்ளதாக வாரப் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. கடந்த 2 ஆண்டில் வன்முறையில் ஈடுபட்ட தமிழ்க் குழுக்கள் யார்? ஏன் யாரும் இது பற்றிப் பேசவில்லை? என்னைப் பயங்கரவாதியாகச் சித்தரிக்க கலைஞர் முயற்சிக்கிறார். நான் கவனத்துடன் பேசிக்கொண்டிருக்கிறேன்.

நான் நேசித்த இயக்கத் தலைவரால் துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டவன். நான் எந்தப் பாதுகாப்பும் கேட்கப்போவதில்லை. என்னைப் பொறுத்தமட்டில் டாக்டர் கலைஞருக்குச் சொல்வேன், எனக்கு அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் கலைஞரைவிட சந்தோசப்படுபவர் வேறுயாரும் இருக்க முடியாது.

திருவண்ணாமலை பெரிய தெரு மேட்டில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத்தில் பேசிய திரு. வை. கோபாலசாமி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கூட்டம்முன்னாள் எம்.பி. முருகையன் தலைமையில் நடைபெற்றது. திரு. வை. கோபாலசாமி மேலும் பேசு

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் கருத்துக்கு ரணில் எதிர்ப்பா?

## தினேஸ் குணவர்த்தன கேட்கிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினை இனப்பிரச்சினையல்ல. பயங்கரவாதப்பிரச்சினையே என டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

அவரின் இக்கூற்று தமிழர்களுக்கு அரசியல் பிரச்சினை இல்லை எனக் கூறுவதாக இருககிறது. அப்படியிருக்க பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க வட-கிழக்கு பிரச்சினை இனப்பிரச்சினை தான். தமிழருக்கு அரசியல் பிரச்சினையுடன் இனப்பிரச்சினையுமிருப்பதாக பல பொதுக் கூட்டங்களில் தெரிவித்துள்ளார்.

அப்படியானால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காகூற்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறுக்கிறாரா என்பதையும்

(5ஆம் பக்கம் பார்க்க)

# 'ஒப்பறேசன் தவளை' ஒளிப்பதிவு நாடா வருகிறது

விடுதலைப்புலிகளால் ''ஒப்பறேசன் தவளை'' எனப்பெயர் சூட்டப்பட்டு நடாத்தப்பட்ட பூநகரிச் சமரின் வீடியோ நாடா எதிர் வரும் 15-ம் திகதி வெளிவரவுள்ளது என விடுதலைப்புலிகளின் நிதர்சன நிறுவனத்தினர் அறியத்தந்துள்ளனர்.

# யாழ். வாலிபர் இருவர் சங்கிலித் திருட்டில் கைது

(சென்னை)

சென்னை விருகம்பாக்கம் பகுதியில் பெண்மணியொருவரிடம் தங்கச்சங்கிலி பறித்தது தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் தமிழக பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: விருகம்பாக்கம் பகுதி வீதியில் சென்று கொண்டிருந்த சரோஜா (வயது 55) என்ற பெண்மணியிடமிருந்து மோட்டார் சைக்கிளில்வந்த இரு இளைஞர்கள் சங்கிலியைப் பறித்துச்சென்ற வேளை அப்பகுதியால் வந்த பொலிசாரினால் கைதாகினர். சந்து(வயது 25), ரொபின் (வயது 35) ஆகிய இருவருமே இச் சம்பவத்தில் பொலிசாரினால் கைதானவர்களாவர் இவர்களிடமிருந்து பத்தாயிரம் பெறுமதியான

(5ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

N. C. O. M. S: பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க வேலைகள் விரைவில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(7350)

### SPOKEN ENGLISH

Spoken English with grammar and Literature, English Teacher's and NCE Examinations Peoples Bank Examination in பொது அறிவு, உளச்சார்பு, மொழித்திறன். சந்திப்பு: காலை8 மணிக்குமுன். V. N. KANDASAMY; 87, திருநெல்வேலி றோட், கொக்குவில். (7450)

### தவறிவிட்டது

5-02-94 அன்று கிளாலி ஏறுதுறையில் வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (573410815V) மற்றும் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி அல்லது யாழ்ப்பாண மின்சாரசபையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7459)


### அலுவலகம் இடம்மாற்றம்

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கி வந்த சங்கானை கோட்டகல்வி அலுவலகம் கடந்த வாரம் முதல் சங்கானையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

வட்டுக்கோட்டை, சுழிபுரம் கொத்தணிகளைச் சேர்ந்தபாடசாலைகளும்பண்டத்தரிப்புகொத்தணியைச் சேர்ந்த சில பாடசாலைகளும் சங்கானைக்கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

## பிரதேசச் செயலகம் வழங்கும்

(கொழும்பு)

அரசாங்க செயலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த வாகன சாரதிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் இனிமேல்பிரதேச செயலகங்களால் மேற்கொள்

## கிறிஸ்தவ மததலைவர்களின் கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆயர் பங்கு நடுநிலையத்தில் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டிருக்கும் அங்கிலிக்கன் மற்றும் மெதடிஸ்த திருச்சபையினருடனான திருச்சபைக் கூட்டம்நாளை புதனன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ''போரினால் சீரழிந்திருக்கும் சிறிலங்காவில் கிறிஸ்தவர்களின் பங்கும் பொறுப்பும்'' என்னும் பொருள் பற்றி நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கிறிஸ்தவ சமயக் குரவர்கள் கருத்துத் தெரிவிப்பார்கள்.

கூட்டத்தில் நாட்டில் சமாதானமும், சாந்தியும் வேண்டிக் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது என்று இக்கூட்டத்தின் அமைப்பாளர் குருமுதல்வர் எஸ். ஜே. இம்மானுவலின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திரு. கதிரிப்பிள்ளை கனகசபை

சூரியபவான் உரிமையாளர் ,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பிறப்பு: 9 - 6 - 1924  இறப்பு: 9 - 1 - 1994

எங்கள் குடும்ப வானில் உதயமான அணையாத தீபமாய் எரிந்த ஆருயிர் தெய்வமே! பாசம் மிகுந்த தந்தையே, இன்பங்கள் ஒன்றாய் கூடி வந்த வேளைகளில் எங்களுடன் இன்புற்றிருந்தீர்கள். பின்னிடையேதும் பெறாமல் நாம் கண்கலங்கி நிற்க கடவுள் ஏன் அழைத்தானோ?

ஐயா உங்கள் நினைவு என்றென்றும் எங்களை விட்டுப் போகாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

31-ம் நாள் அந்தியேட்டிக்கிரியை 8-2 - 1994 இன்று நடைபெற உள்ளது. அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மிதிலை இல்லம்,
ஏழாலை தெற்கு,
விழிசிட்டி,
சுன்னாகம்.

(7434)

## இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசைவிழா

இடம்: மன்ற கலாமண்டபம்
காலம்: 12.02.94 — 26.02.94
தினமும் பி. ப. 4-00 — இரவு 10-00 மணி.

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப்பிரசங்கம், பரதநாட்டியம் போன்ற பல தரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இளங்கலைஞர்களும் முன்னணிக் கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,

மேற்படி மன்றத்தினர்

(இ-8560)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வீரவேங்கை யசோ

(தங்கமயில் சுகிர்தா)

பிறப்பு: 15 - 01 - 1972  வீரச்சாவு: 11 - 11 - 1993

11-11-1993அன்று பூநகரியில் நடந்த சமரில் வீரச்சாவடைந்து இன்று 08-02-1994 செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் 90-ம் நாள் நினைவு அஞ்சலியிலும் அந்தியேட்டியிலும் சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பெற்றோர், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.

சந்தை வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

(7438)

## 90-ம் நாள் நினைவலைகள்

## வெளிவந்துவிட்டது

### பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொருளியல் நூல்கள்

- நுகர்வோர் கோட்பாடு (எல்லைப்பயன், சமபயன் கோட்பாடுகள்)
- உற்பத்திக் கோட்பாடு
- வருமானச் சுற்றோட்டம்
- இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு

ஆக்கியோன் திரு.S. வரதராஜன்

நாடவேண்டிய ஒரே இடம்

### தமிழ்த்தாய் புத்தகசாலை

191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8559)


## நினைவு கூருகின்றோம்..

### 1994-02-08

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-பருத்தித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம்லெப். முரளி** (வேலுச்சாமிதெய்வேந்திரசிகாமணி - பொலிகண்டிமேற்கு - வல்வெட்டித்துறை)

**தர்மராஜன் உதயன்** (அருளப்பு சத்தியா ஜேசுதாஸ் கடற்கரைவீதி, பருத்தித்துறை)

**பேமன்-சோமன்** (ஞானப்பிரகாசம் அருள்ஞானதாஸ் - வெளிச்சவீட்டு ஒழுங்கை.பருத்தித்துறை)

1987ஆம் ஆண்டு திருமலை -கும்புறுப்பிட்டி பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**பவன்** (தியாகராசா சுபேந்திரன்- திருகோணமலை)

1988ஆம் ஆண்டு மன்னார் - பேசாலைப்பகுதியில் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சுனில்** (வடிவேல் கந்தசாமி - தங்கநகர், மூதூர் திருமலை)

அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**நடேசன்** (தம்பிலுவில் - அம்பாறை)

மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்-

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - உடையார்கட்டு பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். செல்லன்தம்பி** (ஆறுமுகம் மகேந்திரன்- 2-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - மணலாறு)

யாழ்-கொக்குவில் கிழக்குப் பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்பின

அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் இனிமேல்பிரதேச செயலகங்களால் மேற்கொள் ளப்படவுள்ளது.

எனவே சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பித்து அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிய வருகிறது.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் கடந்த 17ஆம் திகதி தவறவிடப்பட்ட ஒரு தொகைப்பணம் நன்னித்தம்பி நந்தீஸ்வரன் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு சுன்னாகம் காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் சுன்னாகம் காவல் பணிமனையில் நேரில் சென்று ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு திட்ட உத்தியோகத்தர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், சமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் சிறுபணியாளர் சேவை ஆகிய பதவிகளுக்கானவிண்ணப்பங்களை கோரியுள்ளது. எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

தகுதியுடையவர்கள்தங்கள் விண்ணப்பங்களை பத்து தினங்களினுள் யாழ். செயலக திட்டமிடல் பிரிவில் நேரடியாக சமர்ப்பிக்கலாம் என யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

## 90 ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கப்டன் தேவசுஜி

(இரத்தினம் சுபத்திரா)

(கீரிமலை, காங்கேசன்துறை)

| அன்னை வயிற்றின் | அன்னை பூமியின் |
|---|---|
| மூத்தாய் | வித்தாய் |
| 03-10-1967 | 11-11-1993 |

பூநகரி மீட்பினிலே பூமித்தாய் தத்தெடுத்த
பூமகளே!
சாவினிலும் சரித்திரம் படைத்திட்ட மான
மறத் தமிழ்மகளே!
பொன்னை யொத்த மேனியெங்கே பூ
விரிந்த சிரிப்பெங்கே - உன்
தளராத நடையெங்கே! தலை நிமிர்ந்த
வீரம் எங்கே! பூ மகளே வண்ண
நிலவே நீ வளர்பிறைபோல் வருவாயே!

08-02-1994 செவ்வாய் இன்று எமது இல்லத்தில் நிகழவிருக்கும் வீட்டுக்கிரிகைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் சகல போராளிகளையும் உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி;
ஸ்ரீமகால்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

- குடும்பத்தினர்

(7551)

## 90-ம் நாள் நினைவஞ்சலிகள்



### கடற்கரும்புலி மேஜர் கணேஸ்

(நாகநாதி ஜீவநேசன்)

| தாயின் மடியில்:- | பூநகரி மண்ணில்:- |
|---|---|
| 22- 1- 1973 | 11- 11- 1993 |

எங்கள் ஜீவனே கொஞ்சம் நில்லு!

திக்கெலாம் புலிகளின் வீரம் கண்டாய்
தெரித்திட ஒளியாய் நின்று சென்றாய்
தன்னிகரில்லா பூநகரிக்கு நளன் படகில் போனாய்
சாதனை படைத்திட புலியாய்ப் பாய்ந்தாய்
தாயகம் மீட்க உன்னையே தந்தாய்
தமிழீழம் காக்க எம்மையே கொடுப்போம்.

8-2-94 இன்று செவ்வாய்க்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் 90ஆம் நாள் நினைவஞ்சலியிலும், வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் சகபோராளிகளையும், நண்பர்களையும், உற்றார், உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

- குடும்பத்தினர்.

நவக்கிரி,
புத்தூர்.

(7446)

யாழ்-கொக்குவில் கிழக்குப் பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்பிணமாக வீசப்பட்ட பிறவுண்வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு வவுனியா- பறநட்டகல்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது நிகழ்ந்த விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**அஜந்தன்** (சின்னையா சூரியகுமார்-கல்லாறு செட்குளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு மட்டு - கரடியனாற்றுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

**விஜி** (பாக்கியராசா விஜயகுமார் - திருப்பத்துறை வீதி - மட்டு)

முல்லைத்தீவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த-

**மேகலன்-மாறன்** (இராசையா சுரேஷ்- மாறா இலுப்பை - மணலாறு)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**இளந்தேவன்-காசன்** (கோணமலை விஜேந்திரன் - மாமூலை - முள்ளியவளை - முல்லை)

யாழ் - மருத்துவமனையில் மார்புநோய் காரணமாகச் சிகிச்சைபெற்று வருகையில் எமைப்பிரிந்த-
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன அலுவலர்

**கப்டன் கீர்த்தியப்பா-கீர்த்திஜயா** (அன்றூஸ் யோசப் நல்லூர்வீதி, யாழ்)

வவுனியா - தடைமுகாம் பகுதியிற் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலின் போது அதிர்ச்சியுற்று உயிரிழந்த தமிழ்ப்பொதுமகன்

1993ஆம் ஆண்டு மட்டு - கிரான்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில்வீரச்சாவெய்திய-

**மணாளன்-நளன்** (கேசவப்போடி ஜீவராசா- புதுக்குடியிருப்பு - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவார்-

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(ஓ-8557)

நல்லூர் இணை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

# அமரர் ஆ. கணபதிநாதன்

## கர்மவீரன் அமரர் கணபதிநாதன்

வையகம் பயனுற வாழ்தல் ஒரு தலை. கல்வியுலகில் ஆசிரியராய், அதிபராய் செயலாற்றித் தான் பிறந்த மண்ணுக்கும் கல்விச் சமூகத்துக்கும் பணிபுரிந்த வளலாய் தந்த ஆ. கணபதிநாதனை தமிழ் கூறும் நல்லுலகு என்றும் மறக்கமாட்டாது. அசல் திராவிடனுக்குரிய தோற்றப் பொலிவும் பளிச்சிடும் வெண்துகில் ஆடையும் பொலிய சிரித்த முகத்துடன் அன்றே மிதிவண்டியில் பவனிவந்து செயலாற்றிய கர்மவீரன். கல்விப் பணிசெய்ய வடமாநிலத்துக்கு நான் வந்த காலை அன்னாரை நான் காண நேர்ந்தது. சாதனை வீரராக அயராது உழைக்கும் ஒரு சிலரை மட்டும் யான் கண்டதுண்டு.

வைத்தியப் பரம்பரையில் தோன்றிய கணபதிநாதன் தாமும் அப்பணி தெரிந்தவராய் உளவிருள் அகற்றும் ஆசிரியத் தொழிலை 1933ஆம் ஆண்டு மேற்கொண்டார். ஆசிரியத்துடன் சமூகப் பணிகளிலும் முற்றும் ஊறியமைக்குக் கிடைத்த பரிசாக 1957இல் அரசு அவர்களை சமாதான நீதிபதியாக நியமித்துக் கௌரவித்தது.

கல்விப் பணிப்பாளர்கள் வரிசையில் திரு. சோமசேகரம், திரு. தணிகாசலம், திரு. மாணிக்கவாசகர், திரு. சிவநாதன், திரு. சிமியாம்பிள்ளை, ஜனாப் மன்சூர், திரு. சபாநாயகம் ஆகியோருடன் புந்திக் கிலேசமற நட்பாங்கிளமையுடன் பழகித் தம்மை நாடிவருபவர்களின் துயர்களைச்சங்கமமைக்காமலே துடைத்த தீரன், சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கல்வித்திணைக்கள ஊழியர்களினதும் ஆசிரியர்களினதும் இடர்கடன் பெறும் வாய்ப்புக்களுக்கு இடர்களைந்து உதவிய நன்மனத்தார்.

இவர்தம் கல்விச் சேவைக்கும் சமூகச் சேவைக்கும் பரிசிலாக சீரான எச்சங்களை இறைவன் அமரர் கணபதிநாதனுக்குக் கொடுத்து அருள் பாலித்திருக்கிறார். இவரது குழந்தைகளில் பலர் ஆசிரியப் பணியை மேற்கொண்டமை வாழையடி வாழையாகச் சேவையாற்ற வாய்ப்புண்டாகுமெனலாம்.

இச்சான்றோனைப் பற்றி நயப்புரை நல்குவதில் பெருமையடைகிறேன். நன்றியுணர்வுடன் சமூகம் இவரை நினைவுகூருவதாக! என்றும் கணபதிநாதன் எம் மனத்தடங்கண் வாழும் அம்சரோருகமே.

**இ. சுந்தரலிங்கம்**
முன்னாள் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

## அமரர் அவர்களின் வரலாற்று ஏடு

செம்மண்ணில் கால் புதைந்து நிற்க மிளகாயும் வெங்காயமும் புகையிலையும் காய்கறியும் செழித்திருக்கும் பூரிப்பில் மெய்மறந்து நிற்கும் கமக்காரர் வாழும் விவசாய பூமி வளலாய் என்ற கிராமம். இக்கிராமத்தில் மகப்பேற்று மருத்துவத்தில் பிரபல்யம் பெற்ற சித்த வைத்தியர் ஆசையர் என்பவருக்கும். தெய்வானை என்ற பண்பு நிறை மாதுக்கும், பிறந்த பெருமைமிகு ஐந்து மக்களுள் 10-4-1914 ஆண்டு சிரேஷ்டமகனாகப் பிறந்தவர் அமரர் ஆ. கணபதிநாதன் ஆவார்.


இவரின் ஆரம்பக்கல்வி சொந்தக் கிராமப் பாடசாலையிற் பயிற்றுவித்த தந்தை ஐந்தாம் வகுப்பின் பின் தெல்லிப்பளை யூனியன்கல்லூரிக்கு மகனை அனுப்பிவைத்தார். தேர்வுகளில் தடங்கல்களின்றிச் சித்தியெய்தியதால் தன் பதினெட்டாவது வயதில் 1933 ஆண்டு அமெரிக்கன் மிசனறிப் பாடசாலையொன்றில் ஆசிரியராக பணியாற்றச் சென்றார். இளமைப்பருவத்திலேயே தீரமும் வேகமும் வாக்கு வன்மையும் கொள்கைப்பற்றும் விடா முயற்சியும் தன்னகத்தே கொண்ட இவரின் போற்றத்தக்க குணாம்சங்கள் முழுமைபெற்று இறுதி மூச்சு இழக்கும் வரை நிலை பெற்றிருந்தது வியக்கத்தக்கதே. அவ் இளமைப் பருவத்திலேயே தன் ஊரவர் நலன் வளர்க்கும், மண்ணின் பற்று இவரிடம் உருப்பெற்றது.

1944-ம் ஆண்டில் தன் முப்பதாவது வயதில் தன் மனதுக்குகந்த நங்கை நவமணி என்பவரை மனையாளாக்கிக் கொண்டார்.

தந்தையின் வைத்தியத்தை தானும் மெல்ல கற்று கொழும்பில் நடந்த சித்த வைத்திய பரீட்சையில் சித்தியெய்தி 1951 ஐப்பசி மூன்

மாவட்ட சமாதான நீதவானாக்குமாறுஅரசுக்கு சிபார்சு செய்தார். அதன் பிரகாரம் 1957 ல் இவர் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார்.

நன்கு ணர்ந்த அமரர்தந்தை செல்வா, அமரர் E.M.V நாகநாதன், அமரர் கதிரவேற்பிள்ளை ஆகியோர் இவர் மீது அன்பும், மதிப்பும் கொண்டிருந்தனர்.



இதே ஆண்டு அவர் ஆசிரியப்பணி வரலாற்றிலும் ஒரு முக்கிய நிகழ்வு நிகழ்ந்தது. அமெரிக்கன் மிசனறி முகாமைத்துவ பாடசாலையில் நியமனம் பெற்றதினால் இவரின் மதிநுட்பத்தினையும் செயலாற்றலையும் ஆளுமைத்திறனையும் நன் குணர்ந்த முகாமையாளர் இவரைத் தம் மகத்தே இணைக்க அதிபர் பதவி என்ற மோகம் காட்ட முயன்றனர். ஆனால்

தற்றுணிபாக செயற்படுவதற்கு இவர் ஓர் உதாரணபுருஷராக விளங்கினார். (பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி வசதியை அதிகரிககதிரு. W. கன்னங்கரா கிராமபிரதேச மக்கள் சேர்ந்து ஒரு பாடசாலையை அமைத்து தேவையான உபகரணங்களை வழங்கி ஆசிரியர்களையும் சேவையில் ஈடுபடுத்தினால் அரசாங்கம் பொறுப்பேற்கும் அல்லது உதவி நன்கொடை பெறும்

கள் எண்ணற்றவை. அவரால் உயர்வு பெற்ற குடும்பங்கள் பல.

பல்வேறு பணிகட்கிடையில் பொறுப்பு மிகக தன் குடும்பத்தை வளம்பெற வைத்தார். ''தக்கார் தகவிலார் என்பார் அவரவர் எச்சத்தால் உணரப்படும்'' என்ற வள்ளுவரின் வாக்கினை உறுதிப்படுத்த அவரின் எச்சங்கள் உயர்வு பெற்று வாழ்கின்றனர். யா| திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலையில் தன் பிள்ளைகளை கல்வி கற்பித்தார். அவரது ஐந்து பெண்பிள்ளைகளில் நால்வரைஆசிரியைகளாகவும் மூன்றாவது புதல்வியை வைத்தியப் பரம்பரை வளரவேண்டும் என்ற நோக்கில் பொரளை ஆயுர்வேதக் கல்லூரியில் கற்பித்து வைத்தியராகவும் ஆக்கினார். ஆண் பிள்ளைகள் நால்வரையும் யாழ் மத்திய கல்லூரியில் கற்பித்தார். அமரராகிவிட்ட சிரேஷ்ட மகன் ஜேர்மனியில் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றினார். இரண்டாவது மகன் தந்தையின் குடும்ப பாரம் குறைக்க கல்வியைத் தொடராது பொருள் நாடி ஜேர்மனி சென்றார். மூன்றாவது மகன் இலங்கை வங்கியில்எழுதுவினைஞராக கடமையாற்றுகிறார், இளைய மகன் தந்தையின் கனவு நனவாக பொறியியலாளராகினார். ஐந்து பெண்பிள்ளைகளையும் தக்க மணவாளரிடம் கையளித்தார். ஒய்வுக் காலத்தில் நிறைவெய்தி வாழ்ந்தார்.

1994ஆம் ஆண்டு தை. 9-ம் திகதிகாலன்கவரும்நாள்குறிக்கப்பட்டதுபோலதன் நண்பருடன் உரையாடி சிறிது நேரத்தில் மூச்சுத் தடுமாற இதய வலியும் ஒன்றுசேர மனைவி, மக்கள், உடன்பிறந்தார் இறைவன் திருவுளத்தால் உடனிருக்க உறங்குவதுபோல மெல்லனவே கண்மூடி 78வது வயதில் அரனடி சேர்ந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்.

## செம்மையதாய் செய்து முடிக்கும் சீரினன்

வையகம்பயனுற வாழ்வதற்கு வல்லமை வேண்டி நின்றான் வரகவி பாரதி. வாழ்வாங்கு வாழ்தல் சிறப்பென்றான் வான்புகழ் வள்ளுவன். இத்தகைய கோட்பாடுகளுக்குஇலக்கணமாக வாழ வளலயம்பதியில் வந்துதித்த வினை செறி தீரன் அமரராகிவிட்ட ஆ. கணபதிநாதனவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே சமூகப்புயல் கொடூரமாய் வீசிய காலப்பகுதியில பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவன் வாக்கை மெய்ப்பிக்க தீரர்கள் பலர் தோன்றினர். கோழிமுட்டையால் அம்மிக் குழவியை உடைக்க முனைந்த மனித மாடுகளை உணரவைக்க உத்வேக உணர்வோடு செயற்பட வேண்டிய சீர்த்தி அன்றைய சமூகப் பணியாளர்க்கு தேவைப்பட்டது. ''சமூகமே ஏறு நீஏறு'' என சங்கநாதம் செய்த பாரதிதாசன் போல் சமூக

## "என் சொல்லி இவர் பிரிவை ஆற்றுவோமோ!"

செந்தமிழும் சைவமுமே தழுவி நின்றோன்
சிறப்புடனே ஆசிரியப் பணியைச் செய்தோன்,
எந்தவகை புகழ்வரினும் சைவம்தன்னை

செந்தமிழும் சைவமுமே தழுவி நின்றோன்
சிறப்புடனே ஆசிரியப் பணியைச் செய்தோன்,
எந்தவகை புகழ்வரினும் சைவம்தன்னை
இறுக்கமாய்ப் பின்பற்றி இன்பம் கண்டோன்,
சொந்தமுடன் பந்தமெலாம் சுடரச் செய்தோன்,
சுறுசுறுப்பாய் பலதுறையும் மிளிர்ந்து நின்றோன்,
முந்தையர்கள் வழிவந்த மரபு எல்லாம்
முற்றாகப் பின்பற்றி வாழ்ந்து நின்றோன்.

சமரசமாய் எவரையுமே அணுகிநேர்மை
தவறாது ஒப்புரவு காட்டி வந்த
பெருமையினால் ஜே. பியாய்ப் பதவி பெற்றோன்
பெறுமவற்றுள் அறிவறிந்த தன்மையுள்ள
அருமைமிகு பிள்ளைகளை அவையிலேற்றி
ஆற்றலுடன் அவர்தம்மை வாழவைத்தோன்
இருமையிலும் ஏமாப்பு ஏற்றுநின்றோன்
என்சொல்லி இவர்பிரிவை ஆற்றுவோமோ!

நயினைக்கவிஞர் -**நாக சண்முகநாதபிள்ளை**
அதிபர்
யாழ். மத்திய கல்லூரி

கொழும்பில் நடந்த சித்த வைத்திய பரீட்சையில் சித்தியெய்தி 1951 ஐப்பசி மூன்றாம் திகதி, சித்த வைத்தியராக பதிவு செய்யப்பட்டார்.

ஆசிரியப் பணியுடன் சமூக சேவைப் பணியை முன்னெடுத்து செல்லவும் மொழியின் மீது கொண்ட அளவற்ற பற்றினாலும் தமிழரசுக் கட்சியுடன் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டார். தன்னலமற்ற சேவை புரிந்த கோப்பாய் கோமான் அமரர் கு. வன்னியசிங்கத்தின் பணிகளுக்கு தோள் கொடுத்து உதவினார். தனது கிராமத்தின் வளர்ச்சிக்கும் இனத்தின் வளர்ச்சிக்கும் தளராது உழைத்தது கண்டு அமரர் வன்னியசிங்கம் இவரை யாழ் தம் மகத்தே இணைக்க அதிபர் பதவி என்ற மோகம் காட்ட முயன்றனர். ஆனால் இவரின் சைவப்பற்றும் தீரமுள்ள நெஞ்சும் காரணமாக அம் முயற்சியில் அவர்கள் தோற்றுவிட்டனர். உடுப்பிட்டி அ. மி. த. க. பாடசாலையில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் கதிரிப்பாய் அ. மி. த. க. பாடசாலை மாணவர் வரவு குறைவினால் மூடப்படும் நிலையேற்பட்டது. முகாமையாளர் பல்வாறு சிந்தித்து கணபதிநாதன் மட்டுமே இந்நிலையில் இப்பாடசாலையின் தலைவிதியை மாற்ற முடியும் என முடிவெடுத்து அவரை அதிபராக்கி இப்பாடசாலைக்கு அனுப்பி வைத்தார் அவர்கள் முடிவு தீர்க்கமானதாக அமையும் வகையில் பாடசாலை இவர் காலத்தில் வளர்ச்சி பெற்றது.

பாடசாலைப்பணி, வளலாய் கிராமத்தின் வளர்ச்சி, தமிழரசுக் கட்சியுடன்சேர்ந்த பணிகள், பொறுப்புள்ள குடும்பபாரம் இத்தனையும் ஒருசேரக் கவனித்து ஓய்வின்றி உழைத்தார். 1961ல் கச்சேரியில் தந்தை செல்வா தலைமையில் நடந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் தன் கிராமத்தவர் அனைவரையும் பங்கேற்க செய்ததுடன் இரவு பகல் ஓயாது அப்பணிகளில் ஈடுபட்டார். சத்தியாக்கிரகிகட்கு பொலிஸார் குண்டாந்தடி பிரயோகஞ் செய்து கலவரம் ஏற்படுத்தி தலைவர்களைக் கைது செய்ய முயன்றபோது டாக்டர் E. M. V. நாகநாதனைக் கிறித்தவ மதகுருவாக வேடம் மாற்றி மறைவாகக் கூட்டிச் சென்று பாதுகாக்கும் பணி காரணமாக மூன்று நாட்கள் இவர் முகம் காணாது மனைவி, மக்கள் ஏங்கும் வகையில் வீட்டை மறந்து தன் பணியில்செயலாற்றினார். இவரின் மொழிப்பற்றும், இனப்பற்றும், தீரமும்

யில் ஈடுபடுத்தினால் அரசாங்கம் பொறுப்பேற்கும் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக ஆக்கப்படும் எனும் ''நிர்வகிக்கும் பாடசாலை முறை'' என்ற திட்டத்தினை 1931 - 38 வரையுள்ள தனது கல்விச் சீர்திருத்தங்களில் அமுலாக்கினார். இத்திட்டத்தினை மனதிற்கொண்டு நாடு சுதந்திரம் பெற்றபின், 1950 கல்வி வெள்ளை அறிக்கை உருவாகிய பின் தற்துணிபுடன். (1956இல் மந்துவில் கிராமத்தில் அங்குள்ள படித்த இளைஞர்களை ஒன்றிணைத்து திரு. கன்னங்கராவின் விதியின் பிரகாரம்) ஒரு பாடசாலையை அமைத்தார். இவரின் அயரா முயற்சியினால் பாடசாலையை அரசு விரைவில் பொறுப்பேற்றது. ஆளுமையும், மதிநுட்பமும், தற்துணிபும் நிறைந்த அவர் செயற்பாடுகட்கு இது ஒரு மைல்கல் எனவே கூறலாம்.

1970இல் சுதந்திரக் கட்சி அரசு 55 வயதுடன் கட்டாய ஓய்வுச் சட்டத்தைப் பிறப்பித்தது. பலரின் எதிர்ப்பினால் ஒரு வருட சேவை நீடிப்பு மட்டும் வழங்க முன்வந்தது. இககாலகட்டத்தில் 55 வயது பூர்த்தியாகிய இவர் ஒரு வருட சேவை நீடிப்பு பெற்று தான் கடைசியாகக் கடமையாற்றிய யா/கலட்டி அ.மி: த. க. பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால், பதவியிலிருந்து மட்டுமே இவர் ஓய்வு பெற்றார். தன் வழமையான பணிகளிலிருந்து ஓய்வு பெறாது மேலும் வளர்த்துக் கொண்டார். தன் மதிநுட்பத்தினாலும் வாக்குசாதுரியத்தினாலும் தன்னிடம் வருவோருக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தார். தக்க ஆலோசனைகள் வழங்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தார். இணக்க சபைத் தலைவராகவும் கடமையாற்றினார். அவர் ஆற்றிய செயற்பாடு

வேண்டிய சீர்த்தி அன்றைய சமூகப் பணியாளர்க்கு தேவைப்பட்டது. ''சமூகமே ஏறு நீஏறு'' என சங்கநாதம் செய்த பாரதிதாசன் போல் சமூக இருள்களைய உதித்த இளஞாயிறுகளில் கீழ்த்திசை வானில் தோன்றிய செம்மல் கணபதிநாதன் அவர்கள் விளையும்பயிரை முளையிற் தெரியும் என்பதற்கொப்ப கல்விச் செல்வத்தை கருதிக்கற்று வாழ்வில சுருதி சேர்த்தார். தொட்டனைத் தூறும்மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு என்பதுபோல் கற்றுத்தேறிய கணபதிநாதனவர்கள் தந்தை ஆசையின் ஆசைக்கனவினை நனவாக்க ஆசிரியரானார். உடல்நோய் போக்கிய வைத்தியப் பரம்பரையில் வந்த அமரர் உளநோய் போக்கும் காலக்கண்ணாடியாகிய ஆசானாய், அதிபராய் ஆற்றலால் உயர்ந்தார்.

இராவணன் மேனியில் இலங்கு சீர் நீறென, கணபதிநாதனின் கெம்பீரமானதோற்றத்திற்குஅழகு செய்யும் வெண்துகிலாடையை பார்க்கும்போது ஒரு பூரணத்துவம் காணப்படும். காரிருள்கீறிய பகலவன் போல் புன்னகை நடுவே புலப்படும் பல்லழகு சொல்லும் தரமன்று.

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாதுயற்றுபவர்'' என்னும் மொழிக்கமைய எவ்வினை தானும் செம்மையதாகச் செய்து முடிக்கும் சீரினன். சிரித்துப்பேசி, சிந்தனை நறவம்'' மெல்லென ஊற, கூரிய மதியால் குறையறவினை புரி மதுசூதனன் இவரே.

இராவணன் உடல் புகுந்து தடவிய வாளியைப் போல முயற்சித்திருவினை சிரமேற் கொள்ளின் பல்வேறு தடைகளையும் தவிடு பொடியாக்கி வெற்றிவாகை சூடும் தன்மையில் இவருகொப்பானவர் இவரே.

அரசியல் அரங்கில் நிலையாய் நின்று நன்மதிப்பைப் பெற்ற காலப் பகுதியை எண்ணிப்பார்க்கிறேன். தான்சார்ந்த சமூகம் முன்னேற வேண்டுமென்ற முத்தாய்ப்பான கருத்தைக் கொண்டவர். எண்ணிய கருத்தை துண்ணெனச் செப்பும் துணிச்சல்காரர். இதனால் பல்லோர் உளத்திலும் என்றும் நின்று நிலவும் நீண்நில முழுமதி.

சமூகப்பணிக்கென தான் பெற்ற கிரீடம் சமாதான நீதிபதி என்பதாகும். இளைப்பாறிய காலத்தும் ''என்றும் இளையாய்'' என இயம்பும் வகையில் ஓடியாடித் திரிந்து கருமமாற்றிய கனவான். உதவியற்றோர்க்கு உதவிய செம்மல். எவ்வகைப்பணியானாலும் இதயக்கனிவொடு பிறர் இடர் துடைக்க இடைவிடாது தொடர்ந்து செய்தநீர்மையன். ''தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத் தாற் காணப்படும்'' என்ற வள்ளுவர்வரை கோட்டிற்கமைய நன்மக்களைப் பயந்து பயன்பெற்றபெற்றியர்.

**சி. வேலாயுதம்**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

(சி-7458)

## மாமனிதன் கணபதிநாதனை நாம் மறவோம்

வளலாயின் நாயகனாய் வைத்தியத்தால் உயர்வு பெற்று
வளமான வாழ்வுகண்ட ஆசையரின் வழித்தோன்றல்
உளமார உயர்பணிகள் பலபுரிந்து நிலையாக
உளங்களிலே இடங்கொண்ட நாதனுமை நாம்மறவோம்.

நினைத்ததை முடிப்பதில் நெஞ்சுரம் மிக்கவராய், நல்
வினைத்திறன் படைத்தவராய், முகராசி பெற்றவராய்
அனைத்திலும் வெற்றிகண்டு எதிரியும் போற்றிடும்
தனித்துவம் மிக்கவரே தரணியுனைப் போற்றுதையா

குற்றங்குறை கண்டால் கூசாமல் கூறிடுவீர்
நற்பண்பைக் கண்டவுடன் நயமாகப் புகழ்ந்திடுவீர்
மற்றவர்க்கு அஞ்சாமல் மனக்கருத்தை உரைத்திடுவீர்
நெற்றிக்கண் கண்டஞ்சா நக்கீரனாய் மிளிர்ந்தீர்.

ஆதரவற்றவர் அநாதைகள் ஏதிலிகள் போன்றவர்க்கு
ஆதரவுடனே நிவாரணமும் நன்கொடையும் கிடைத்திடவே
ஏதமில்லாத் தொண்டுகளை ஏற்றமுடன் நிறைவேற்றி
ஆதரவுக் கரங்கொடுத்த உமதுபணி நாடறியும்.

உண்டுடுத்து வாழ்வதுதான் வாழ்க்கையல்ல ஊருக்குநற்
தொண்டியற்றித் துயர்துடைத்துப் பிறர்க்குதவி வாழ்வதுதான்
மண்ணுலகில் மாண்புடைய வாழ்க்கையாகும் அந்நெறியில்
பண்புடனே வாழ்ந்ததினால் பெரியோனாய்ப் போற்றுகிறோம்;

மக்கள் தொண்டே மகேசன் பணியாய் மரணத்தைத் தழுவும்வரை
அக்கறையாய் அயராது அல்லும்பகலும் தொண்டு செய்தீர்
தக்கவர்கள் தொடர்பூண்டு தமிழீழ மண்ணினிலே
மக்கள்புகழ் பெற்றுயர்ந்த மாமனிதா உனைமறவோம்;

- **வளலாயூர் செ. சிவசம்பு**

## எறிகணைவீச்சு

வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியிலிருந்து கடந்த சில தினங்களாக அடிக்கடி ''ஷெல்கள்'' ஏவப்பட்டு வருகின்றன.

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று வெற்றிலைக்கேணியை அண்டிய பகுதியை சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

அதேவேளை சிறிலங்கா கடற்படை விசைப் படகுகளின் ரோந்தும் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

## மதுபான விற்பனைக்கு தடை விதிப்பு


நாவற்குழி லவனிதா குடியிருப்பில் மதுபான விற்பனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இம் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் குடியிருப்பில் உள்ள சிவல் தொழிலாளர் சங்கத்தினால்கள், சாராயம் போன்ற மதுபானப் பொருள்கள் வைத்திருப்பதும் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளதோடு மேற்படி சங்கத்தினர் இரவு பகலாக சந்தேகத்திற்கிடமான வீடுகளை கண்காணித்தும் வருகின்றனர். (22)

## தற்காலிக கொட்டகை அமைக்கப்படுகிறது

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமியார் கோவில் கல்யாண மண்டபத்தில் இயங்கி வரும் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரிக்கென மண்டபத்திற்கு அருகாமையில் சுமார் நூறு அடி நீளமான தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

காரைநகரைச் சேர்ந்த ஏனைய பாடசாலை மாணவர்கள் தற்போது இப்பாடசாலையில் சேர்ந்து கொள்வதால் அவர்களுக்கு இடமளிக்கும் வகையிலேயே இக்கொட்டகை அமைக்கப்படுவதாக அறியக்கிடக்கிறது.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



### 2-ம் லெப். ஈழவேந்தன்

செல்லையா சுந்தரராசன் (அப்பன், சுந்தர்)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 1971 - 11 - 30 | 1993 - 11 - ıı |

புதுப்பரணி ஒன்று எழுதிடவே
எழுந்திட்ட புலியிவன்
தமிழரின் தாயகத்தை மீட்டிடவே
புறப்பட்ட தன்மான வீரனிவன்
கோவை மண்ணில் வந்துதித்த
சிறந்த கல்வியாளனிவன்
நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்த
நல்லதோர் சமூக சேவகனிவன்
பூநகரியில் வீரகாவியம் படைத்திட்ட
தமிழ்ஈழ வேந்தனிவன்.

இன்று நடைபெறும் (8 - 02 - 94) ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், சக போராளிகளையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

ஜெயக்குமார் வீதி,
கோப்பாய் வடக்கு.

- குடும்பத்தினர்

(7431)

வடமராட்சி மென்பான விற்பனையாளருக்கு

ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. சாயி கிருஷ்ணா, வதிரி சந்தி, நெல்லியடி.
2. வேலவன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.



TASTE LINE
INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
JAFFNA.

(இ-8517)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

காரைநகரில் 1975-08-11



பூநகரியில் 1993-11-11

### கடற்புலி 2-ம் லெப்டினன்ட் ஏழுமலை

(சதாசிவம் சிவாகரன்)

ஆண்டாண்டு காலமாய் தமிழர்
அனுபவித்த துயரங்களை
பூண்டோடு அழிப்பதற்கே
பூநகரிப் போரினிலே கலந்தாய்
மாண்டு நீ போகவில்லை மகனே!
மறத்தமிழர் நெஞ்சத்தில் வாழ்கின்றாய்
வீழ்ந்து நீ போகவில்லை மகனே!
விடிவொன்று தமிழருக்கு படைத்துவிட்டாய்

எமது இல்லத்தில் 08 - 02 - 1994 இன்று நடைபெறும் அந்தியேட்டிசபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனவிருந்திலும் சகபோராளிகளையும் நண்பர்களையும் உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவில் கலந்துவிட்ட,
உன் அம்மா, அப்பா, தங்கை

15/3, கடற்கரைவீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(7423)

## 90-ம் நாள் நினைவலைகள்



### 2-ம் லெப். எழிலினி

(தனதாசன் இந்துமதி)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 30. 10. 1ෳ73 | 11. 11. 1993 |

தாயக மண்ணின் மீட்பே
தாகமாய் கொண்டீர்கள்!
பாயும் புலியாகிப் படையினில்
போய் இணைந்தீர்கள்!
தோயுறோம் உம் நினைவில்
துவழ்கிறோம் எந் நாளும்!

- குடும்பத்தினர்
உற்றார், உறவினர்.


கெலன் எஸ்ரேட்,
வசந்தபுரம்,
கொழும்புத்துறை.

(7444)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



ப்பட்டு வருகிறது.

காரைநகரைச் சேர்ந்த ஏனைய பாடசாலை மாணவர்கள் தற்போது இப்பாடசாலையில் சேர்ந்து கொள்வதால் அவர்களுக்கு இடமளிக்கும் வகையிலேயே இக்கொட்டகை அமைக்கப்படுவதாக அறியக் கிடக்கிறது.

இன்று நடைபெறும் (8 - 02 - 94) ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், சக போராளிகளையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

ஜெயக்குமார் வீதி, - குடும்பத்தினர்
கோப்பாய் வடக்கு. (7431)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி



## லெப்டினன்ட் சாம்பவி
### (தியாகலிங்கம் சுசரிதா)
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

| | |
|---|---|
| தாயக மண்ணில் | தாயக மண்ணுக்காக பூநகரி மண்ணில் |
| 01. 06. 1973 | 11. 11. 1993 |

நேற்றெம் முன்னே நடந்தனை மகளே
நேச முறுவல் செய்தனை மகளே
கூற்றுன் முன்னே கூடி வந்தாலும்
குலையாப்போரை நிகழ்த்தினை மகளே
வேற்றுப் பகையின் வேரினைக் களையும்
விடுதலைப் புலியின் படையிலே நின்று
காற்றும் கலங்கக் கலக்கிய சமரில்
களப்பலியான சாம்பவிக் கண்ணே
ஊற்றுப்போலெம் உளத்தினை நனைத்து
உள்ளே நுழைந்து குளிர்கிறாயம்மா
போற்றிப்பாடும் திறனிலோம் தாளில்
புதுமலர் கண்ணீர் பொழியவைக்கின்றோம்;

**ஒரு நாள் விடியும்! உறங்குக மகளே!**
**அரு நாடமையும்! ஆறுக மகளே!**

08.02.1994 (இன்று) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 90ஆம் நாள் நினைவஞ்சலியிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

உன் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

"தெய்வ வாசா"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (7331)

---

(சதாசிவம் சிவாகரன்)

ஆண்டாண்டு காலமாய் தமிழர்
அனுபவித்த துயரங்களை
பூண்டோடு அழிப்பதற்கே
பூநகரிப் போரினிலே கலந்தாய்
மாண்டு நீ போகவில்லை மகனே!
மறத்தமிழர் நெஞ்சத்தில் வாழ்கின்றாய்
வீழ்ந்து நீ போகவில்லை மகனே!
விடிவொன்று தமிழருக்கு படைத்துவிட்டாய்

எமது இல்லத்தில் 08 - 02 -1994 இன்று நடைபெறும் அந்தியேட்டிசபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனவிருந்திலும் சகபோராளிகளையும் நண்பர்களையும் உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவில் கலந்துவிட்ட,
15/3, கடற்கரைவீதி, உன் அம்மா, அப்பா, தங்கை
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (7423)

---

## 90-ம் நாள் நினைவு மலர்கள்...!
பூநகரியில் வீரச்சாவடைந்த



## வீரவேங்கை இன்பன்
### (இராசரத்தினம் அகிலன் (கிருபா))
(யா / கரணவாய் மகாவித்தியாலய மாணவன்)

| | |
|---|---|
| அன்னைக்காய் | மண்ணுக்காய் |
| 25-04-1975 | 11-11-1993 |

எமதன்புக் கிருபாவுக்கு .........
வீரத்தின் விளைநிலமே --
விடியலுக்கு வித்தானவனே --
பாசத்தை எமக்களித்து
பறந்து நீ எங்கு சென்றாய் --
"பூநகரி" மண்ணிலொரு
புனிதப்போர் தொடுத்துவிட்டு
'இன்பனாய்' எம் நெஞ்சில்
இளநகைதான் புரிகின்றாயோ -- !
நெஞ்சு துடித்திடினும்
நிதமெலாம் வாடினினும்
கொஞ்சுதமிழ் ஈழமதை
நெஞ்சினிலே நிறைத்துநிற்போம் - - !
அஞ்சலிகள் .. அஞ்சலிகள் ..
ஆயிரமாய் அஞ்சலிகள் - - !

குறிப்பு: இன்று எமது இல்லத்தில் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும் என்பதை யாபேருக்கும் அறியத்தருகின்றோம்
நன்றி

மண்டான்,
கரணவாய்மேற்கு, - குடும்பத்தினர்
கரவெட்டி.
1994-02-08 (7445)

---

- குடும்பத்தினர்
கெலன் எஸ்ரேட், உற்றார், உறவினர்.
வசந்தபுரம்,
கொழும்புத்துறை. (7444)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலியும்
# அந்தியேட்டிக் கிரியையும்



## லெப். காண்டீபன்
### (இளையதம்பி பாஸ்கரதாஸ்)
(சாம்பல்தீவு, திருகோணமலை)

| | |
|---|---|
| பிறப்பு: | வீரச்சாவு: |
| 1971.02.09 | 1993.11.11 |

லெப். காண்டீபா .........
எம் உள்ளங்கள் அனலானதே
எம் விழிகள் கடலானதே
பாசங்களைப் பிரிந்து
பசுமையான இளமைதனை சருகாக்கி
தலைவன் வழியில் நின்று
புனித இலட்சியத்துக்காய்
உன் கால்கள் நடைபோட்டனவோ!
பூநகரியில் புதுக்காவியம்
படைத்துச் சென்றாயோ!
வீர வித்தாக இம்மண்ணில்
நீ விதைக்கப் பட்டாயோ
உன் கல்லறை கருவறையாகுமே
உன் இலட்சியம் நாளை நிறைவேறுமே!

இன்று (08-02-94) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் துயரும்

சகோதர சகோதரிகள்,
ஆ. வெள்ளைத்தம்பி, மைத்துனர், மைத்துனிமார்,
வேம்போடுகேணி, மருமக்கள், பெறாமக்கள்,
பளை. நண்பர்கள்.

(7425)

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

தந்திரமான மனிதர்களை ஞானம் உள்ளவர்களாக அங்கீகரிப்பதால் ஏற்படும் தீங்கை விட அதிக தீங்கு ஒரு நாட்டிற்கு வேறெதுவும் இல்லை.

ஃபிரான்சிஸ் பேக்கன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# நல்லெண்ணத்தை உருவாக்குக!

அண்மையில் யாழ் குடாநாட்டிற்கு பல நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் வருகை தந்துள்ளன. இதில் கத்தோலிக்க, மெதடிஸ்த மற்றும் அங்கிலிக்கன் திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் முக்கிய இடம் பிடித்துக் கொண்டுள்ளனர். இவ்வாறான சமய ரீதியான அமைப்பாகவோ, அன்றி நல்லெண்ண முயற்சி என்று கூறிக் கொள்ளாமலும் அதுவும், சர்வோதய அமைப்பின் தலைவர் ஆரியரட்னாவின் யாழ். வருகையும் இவற்றுடன் ஓரளவு இணைத்தே பார்க்கப்படுகின்றது. திரு. ஆரியரெட்னாவின் சில பேச்சுக்களும் இதனை ஓரளவு உறுதிப்படுத்துபவையாகவே உள்ளன.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏற்கனவே பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிப்படையாகவே எடுத்துள்ளன. இவ்விடயத்தில் அரசிற்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் விதத்தில் சில முயற்சிகளையும் இத்தாபனங்கள் மேற்கொண்டும் உள்ளன ஆயினும், சர்வோதய அமைப்பு இது குறித்து எந்தளவிற்கு செயற்பாட்டைக் கொண்டுள்ளது என்பது கேள்விக்குரிய தொன்றாகவே உள்ளது. ஏனெனில், தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் சர்வோதய அமைப்பின் செயற்பாடும், கிழக்கில் அதன் செயற்பாட்டிற்கும் வேறுபாடு இருப்பதோடு அவை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய, வரவேற்கத்தக்க ரீதியில் இல்லை என்பதே யதார்த்தநிலை ஆகும்.

யாழ் குடாநாட்டைப் பொறுத்து, தற்பொழுது சர்வோதயத்தின் செயற்பாடு மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது. குடா நாட்டில் தற்பொழுது பல அரச சார்பற்ற நிறுவனங்கள் திறம்பட இயங்குகின்றன. அவை துன்புறும் மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதிலும், அவர்களுக்கு நீண்டகால நோக்கில் உதவுவதற்கெனப் பல திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றன. ஆனால், சர்வோதய அமைப்பானது தனது சேவைகளை மட்டுப்படுத்தியுள்ளது. இது வரவேற்கத்தக்கதல்ல.

யாழ். குடாநாட்டு மக்கள் இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின்னர் அரசு அமுல்படுத்திய பொருளாதாரத் தடையாலும், இராணுவ முற்றுகையாலும் பெரும்

# இந்திய அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தால் நாடு திரும்புகின்றோம்

## மன்னார் வந்தவர்கள் தகவல்

இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைப்பதில் இந்திய அரசு அதிகாரிகளின் பல்வேறு வற்புறுத்தல்களும் நிர்ப்பந்தங்களும் இருக்கின்றன என்பதை அண்மையில்ராமானுஜம் கப்பல்மூலம் வந்த அகதிகள் தெரிவித்த கருத்துக்கள் சில ஊர்ஜிதப் படுத்துகின்றன.

அகதி முகாம்களில் வாழும் சிறுவர்களின் கல்விக்கு வசதி செய்யப்படாமை, குடியிருப்புகள் திருத்தப்படாமையும், பராமரிக்கப்படாமையும், முகாம்களுக்கு வெளியே செல்வதற்கு விதிக்கப்படுகின்ற அனாவசிய கட்டுப்பாடுகள், கைதுசெய்யப்படும் இலங்கைத் தமிழர் துணைச் சிறைச்சாலைகளில் விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்துவைக்கப்படுதல், மருத்துவ வசதிகள் இன்மை, தொண்டர் நிறுவனங்களின் சேவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை போன்ற பல விடயங்கள் இலங்கைக்கு திரும்பிச் செல்வதை விரும்பும் வகையில் நிர்ப்பந்திக்கின்றன.

எனினும் இவ் அகதிகளை ஏற்றிவந்த ராமானுஜம் கப்பலுக்கு இந்திய கடற்படையும், கடலோர காவற்படையும் மட்டுமின்றி இந்திய விமானப்படையும் பாதுகாப்பு வழங்கியமையானது பாதுகாப்பான சூழ்நிலையில் இவர்கள் நாடு திரும்பவில்லை என்பதையே காட்டுவதாகும்

அத்துடன் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்து பெரும்பாலும் மீனவர்களை கொண்ட இவ்அகதிகள் நாடு திரும்பிய பின்னரும் கடலில் மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டு இருப்பதும் இவர்களது சொந்தப் படகுகள் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் தொடர்ந்தும் இவர்கள் அகதி முகாம்களிலேயே வாழ நிர்ப்பந்திக்கின்றனர்.

# மாகாணசபை ஆட்சியை முதலில் எதிர்த்தவர் நாமே

**- திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்காகவே மாகாணசபை முறை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அங்கு அது இப்போது செயலற்றதாகி விட்டது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

காலி நகரசபை மண்டபத்தில் சுதந்திரக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்த மாகாணசபை முறையை முதலில் எதிர்த்தவர்கள் நாம். ஆனால் ஜனநாயக ரீதியிலான தேர்தல்களில் பங்குபற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வு இருப்பதாலேயே இத் தேர்தலில் பங்குபற்றுகிறோம்.

அநுரா, காமினி, ஐ.தே.கவில் சேர்ந்தாலும் சரி, றொனி டி. மெல் எமக்கு எதிராக பிரசாரம் செய்தாலும் சரி, சுதந்திரக்கட்சி வீழ்ந்து விடப்போவதில்லை. தென்மாகாண சபையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே கைப்பற்றும். அதன் மூலம் இத் தேர்தலுக்கு பொறுப்பாக ஐ.தே.கவினால் நியமிக்கப்பட்டுள்ள அநுராவுக்கு தக்கபாடம் மக்களால் போதிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சிறுவர்களை ஏமாற்றி நகை அபகரிப்பது தீவிரம்

**-கொழும்பு பொலிசார் எச்சரிக்கை**

(கொழும்பு)

பாடசாலைச் சிறுவர்களை குறிப்பாக சிறுமியரை கடத்திச்சென்று அவர்களிடமிருக்கும் நகைகளை அபகரிக்கும் கும்பல் ஒன்றின் நடமாட்டம் பற்றி கொழும்பு பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் கொட்டாஞ்சேனைப் பகுதியில் பிரபல கல்லூரியின் பாடசாலை விட்ட நேரத்தில் வீட்டுக்கு செல்லக் காத்திருந்த சிறுமி ஒருவரை தந்திரமாக அழைத்துச் சென்ற நபர் ஒருவர் அவரிடமிருந்த நகைகளை கழற்றிக்கொண்டு மாயமாகிய சம்பவத்தை தொடர்ந்து பொலிசார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

# பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி விரைவில்

(கொழும்பு)

பல்கலைக்கழக விண்ணப்பப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்பு

தெரிவித்துள்ளார்.

இந்த அட்டைகள் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் வெளி

### பாலர் பாடசாலை திறந்து வைப்பு

(வடமராட்சி கிழக்கு)

'போருட்' அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலை ஒன்று வத்திராயன் தெற்கில் திறந்து வைக்கப்பட்டது.

உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் திரு. பொ, சங்கரப்பிள்ளைஇப்பாலர்பாடசாலையைத் திறந்து வைத்தார். (36)

### பாடசாலை உபகரணம் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

மட்டுவில் வடக்கு முசுறிப் பகுதியில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்கு உலக தரிசன நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கி உள்ளது. (24)

# ஆலயத்தில் திருட்டு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள புனித சூசையப்பர் ஆலயத்தின் யன்னல் கதவை அண்மையில் உடைத்து உட்சென்ற திருடர் கோஷ்டி சுவாமியின் உடுப்புக்கள், பெறுமதி மிக்க மின்சார உபகரணங்கள் உட்பட

# பாகிஸ்தான் அரசுக்கு புலிகளுடன் தொடர்பில்லை

**தூதரகம் அறிக்கை**

பாகிஸ்தானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக யு.என்.ஐ செய்தித்தாபனம் வெளியிட்ட செய்தியை பாகிஸ்தான் விசமத்தனமானது எனக் கூறி மறுத்துள்ளது.

இது சிறிலங்காவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள நட்புறவை இல்லாதாக்கி பகைமையை உருவாக்க செய்யப்பட்ட முயற்சி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காப்புறுதி ஊழியருக்கு யாழ். இல்நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர் முகப் பரீட்சையை யாழ். நகரில் நடத்துவதற்கு யாழ். அரசாங்க அதிபர் அனுமதி பெற்றுள்ளார்.

மேற்படி தற்காலிக ஊழியர்களுக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றை நடாத்தி அதன் மூலம் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ)

# கள்ளில் கலப்படம் 7500 ரூபா அபராதம்

(வடமராட்சி)

கள்ளில் கலப்படம் செய்த குற்றத்திற்காக தொழிலாளி ஒருவருக்கு ஏழு ஆயிரத்து ஐந்நூறு ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் அல்லது 300 நாட்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடுத்துமாறும் பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

வல்லிபுரக் குறிச்சி புற்றளை மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் குகதாஸ் என்பவருக்கே நீதியாளர்கள் தண்டம் அறவிட்டுள்ளனர்.

58 போத்தல் கள்ளில் ஈஸ்ட், தண்ணீர் ஆகியவற்றைக் கலப்படம் செய்து கள் விற்பனைச்சாலை ஒன்றிற்கு எடுத்துச் சென்ற சமயம் பருத்தித்துறை காவல்துறையினரால் சோதனை செய்யப்பட்டபோது இச் சம்பவம் அம்பலமாகியது. காவல் துறையினர் நபரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (யோ)

### யாழ்.

தங்கச்சங்கிலிமீட்கப்பட்டது இவர்கள் திருட்டிற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் வேறு ஒரு இடத்தில் திருடப்பட்டதென பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

### ஜனாதிபதியின்

ஜனாதிபதி கூற்றை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்கிறாரா? இல்லையா? இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 513 தமிழ்

கொண்ட மேலும் மூன்று தொகுதியினர் எதிர்வரும் 17

### வை. கோவை

வையில் சேலம் செயற்குழுக் கூட்டத்தில் பேசிய கலைஞர் நான் இலங்கைக்கு பயணம் போனது பற்றிப் பேசினார். தோணியில் "ஆட்வெஞ்சர்" ஆக போய் வந்ததாக பேசியுள்ளார். எந்தக் கட்டத்திலும் நான் இலங்கைக்கு சென்று வந்ததுபற்றி விளம்பரப்படுத்திக்கொண்டதுண்டா? நீங்கள் உங்கள் கல்லக்குடி போராட்டம் பற்றி வர்ணிக்காத மேடை உண்டா? நான் ஈழப் பயணத்தைப் பற்றி பேசினேனா?

8ஆம் திகதி காலை என் உயிர் நண்பன் குட்டி கலைஞரிடம் கடிதத்தைக் கொடுத்தார், அன்றிரவு கலைஞர் டெல்லி புறப்பட்டுச் சென்றார். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர இந்திய அரசு வற்புறுத்துகின்றது. பேச்சுவார்த்தைக்கு மார்க்கம் உண்டா என்று கண்டு அறியச் சென்றேன். 8ஆம் திகதி காலை 6-30 மணிக்கு என் கடிதம் உங்கள் வீட்டு மாடியில் கொடுக்கப்பட்டது. அமாவாசை இருட்டில் இரவில் கடலில் போனேன்.

டாக்டர் கலைஞர் அவர்களே! உங்களுக்கு இ

யாழ். குடாநாட்டு மக்கள் இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின்னர் அரசு அமுல்படுத்திய பொருளாதாரத் தடையாலும், இராணுவ முற்றுகையாலும் பெரும் துயர் அனுபவித்து வருகின்றனர். யுத்தத்தினால் அகதிகளாகி, வீடுவாசல்களை இழந்துள்ளதோடு, தொழில் இழந்தும் அல்லல்படுகின்றனர். இந்நிலையில், பெருமளவில் மக்களுக்கு உதவ வேண்டிய சர்வோதயம் தனது சேவையை மட்டுப்படுத்திக் கொண்டமையானது, இந் நிறுவனத்தின் செயற்பாட்டில் நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்துகின்றது.

அத்தோடு, யாழ். மாவட்ட சர்வோதயக் கிளையானது தனது சேவையைக் கட்டுப்படுத்தியதோடு, அதன் ஊழியர்கள் தொடர்பாக நடந்து கொள்வதும் பெரிய திருப்திகரமாக இல்லை. ஒரிருவரைத் தவிர பல மாதங்களாக ஊழியர்கள் சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உட்பட பல குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதேவேளை, சிரமதான அடிப்படையில் ஊழியர்களை வேலை செய்யக் கோருவதில் நியாயம் எதுவுமில்லை.

இவ்வாறு வடக்கில் தனது சேவைகளை மட்டுப்படுத்திக் கொள்ள சர்வோதய அமைப்பானது, கிழக்கில் அவ்வாறு இல்லாதுவிடினும், அதன் செயற்பாடானது இனச்சார்புடையதாகவும், அரசாங்கத்தின் விருப்பினை அனுசரித்தோ அன்றி நிறைவேற்றுவதாகவும் இருப்பதாகவே காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, கிழக்கில் நடக்கும் சில சிங்களக் குடியேற்றங்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சர்வோதய அமைப்பு உதவி வழங்கியுள்ளமையானது ஏற்புடையதல்ல.

ஒரு நெருக்கடிக்கு உள்ளான பகுதியில், இவ்வாறானதொரு செயற்பாட்டிற்குச் சர்வோதய அமைப்பு நிதி வழங்குதல் என்பது எத்துணை பொருத்தப்பாடானது? அவ்வாறு நிதி வழங்குதல் என்பதை சிறிலங்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு சர்வோதய அமைப்பு துணை போவதாகக் கூறுவதில் தவறென்ன உள்ளது? அதாவது, சிங்கள குடியேற்றத்திற்கான அரசின் பொருட் செலவைக் குறைக்க முற்படுவது போல் செயற்படுவது ஏன்?

இந்நிலையில், சர்வோதய அமைப்பானது தனது முதல் நடவடிக்கையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமது அமைப்பின் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுவது அவசிய தேவையாகும். அப்பொழுதுதான், அதன் தலைவர் ஆரியரெட்னா விரும்புவதுபோல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நல்லெண்ண முயற்சியில் இவ் அமைப்பு ஈடுபட முடியும். மக்களுக்கு அதில் நம்பிக்கையும் பிறக்கும். அதை விடுத்து திரு. ஆரியரெட்னா எந்த முயற்சி எடுப்பினும் வெற்றி எதையும் அளித்து விடப் போவதில்லை.

பல்கலைக்கழக விண்ணப்பப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்பு படிவம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு கிடைத்துவிட்டது என்பதை உறுதிப்படுத்தும் அட்டைகள் இந்த வார இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர்

இந்த அட்டைகள் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படுவதற்கு முன் விண்ணப்பதாரிகளுககுக் கிடைக்கும் எனவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா பல்கலைக்கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிக்கு நிரந்தர பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு கோரி அந்த நிறுவன மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்.

சுமார் இருநூறு மாணவர்கள் கல்வி பயிலும் இந்த நிறுவனத்திற்கு நிரந்தர பணிப்பாளர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாக முன்பு நியமிக்கப்பட்ட வரும் கூட இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். இந்த வெற்றிடத்திற்கான நியமனம் தொடர்பாக பல்கலைக்கழகமான்ய ஆணைக்குழுவிற்கும் மாணவர்கள் மனுச் செய்துள்ளனர்.

# பனிக்கட்டி உருகுவது போல சுதந்திரக்கட்சி கரைகின்றது

**- ரணில் விக்கிரமசிங்க**

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பனிக்கட்டியைப் போல உருகிக் கரைந்து கொண்டுவருகின்றது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாகொட பகுதியில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த சுமார் எட்டாயிரம் ஆண்களும் பெண்களும்ஜே.வி பியினரால் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் பயங்கரமான நிலையைஎமது காலத்தில் ஐ.தே.க அரசினால் தடுத்து நிறுத்த முடிந்துள்ளது. இதை தடுத்துநிறுத்த வேண்டுமென அவ்வப்போது குரல் கொடுத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி இப்போது அதே நடவடிக்கைக்காக அரசைக் கண்டிக்கின்றது எனவும் தெரிவித்தார்.

## இலுக்குப் புல் கொட்டகையில் பாடசாலை

வாகரை பிரதேசத்தில் இருக்கும் மதுரங்குளம் பாடசாலை, கடந்த ஒருவருடகாலமாக இலுக்குப் புல்லினால் வேயப்பட்ட நீண்ட கொட்டகையில் ஒரே ஒரு ஆசிரியருடன் செயற்பட்டு வருகின்றது. ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரை வகுப்புகளுக்கான மாணவர்கள் இருக்கின்றபோதும் அதிபர் ஒருவரைத் தவிர வேறு ஆசிரியர் எவரும் இப்பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லை.

புக்கள, பெறுமதி மிக்க மின்சார உபகரணங்கள் உட்பட பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பந்தமாக தமிழீழக் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (24)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இன்று அளவெட்டி விநாயகர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது. இப்போட்டி இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## திருடப்பட்டுள்ளது

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சிவன் கோவில் உண்டியல் பெட்டி பணத்துடன் அண்மையில் இரவு நேரத்தில் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

திருட்டுப்போன உண்டியல் பெட்டி சம்பந்தமாக ஆலய உரிமையாளர் தமிழீழக் காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளார். (24)

---

## நனைந்த

பொதிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மிகுதி தபால் பொதிகளை தபாலக ஊழியர்கள் யாழ் தபாலகம் எடுத்து வந்தனர். இன்று தபால்கள் விநியோகம் செய்யப்படும். குறிப்பிட்ட சில வெளிநாட்டுக் கடிதங்கள் நீரில் நனைந்து காணப்பட்டன. (யோ

கொண்ட மேலும் மூன்று தொகுதியினர் எதிர்வரும் 17 ஆம் திகதி தலைமன்னார் வந்து சேர்வர்.

---

## கசிப்பு

டது. கசிப்பு உற்பத்திக்கு இடம் அளித்தமைக்காக நவாலியைச் சேர்ந்த திருமதி புஷ்பராணி என்பவருக்கு குற்றப்பணமாக 15,000 ரூபா விதிக்கப்பட்டது. 30 லீற்றர் கோடா உற்பத்தி செய்தமைக்காக ஊரெழு மேற்கு பொக்கணையைச் சேர்ந்த மயில்வாகனன் சிவனேசன் என்பவருக்கு 25,000 குற்றப் பணம் தீர்ப்பளிக்கப்பட்டது. 25 லீற்றர் கோடா உற்பத்தியும் கசிப்பு விற்பனையும் செய்தமைக்காக கணபதி சின்னத்துரை என்பவருக்கு 35,000 குற்றப்பணமாக விதிக்கப்பட்டது. 180லீற்றர் கோடா உற்பத்தி செய்தமைக்காகஏழாலை மயிலங்காட்டைச்சேர்ந்த திருமதி இராசேந்திரம் குஞ்சு என்பவருக்கு 75,000 குற்றப்பணமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. தவறின் 18 மாதகால கட்டாய சமூகசேவை தண்டனை விதிக்கப்பட்டது.

(09, 11)

டாக்டர் கலைஞர் அவர்களே! உங்களுக்கு இதயமே கிடையாது. மல்லிகையில் ஆறுநாட்கள் என் கெட்டை போட்டுப் பார்த்தார்கள். ஆறுதினங்கள் மல்லிகையில் விசாரிக்கப்பட்டேன். ஒரு சொல் கலைஞர் பற்றித் தவறாகப் பேசியதுண்டா? நான் ஈழம் போனபோது என்உயிர் காக்க பீட்டர்கென்னடி எனக்காக இறந்து போனானே. கலைஞர் அவர்களே, அவன் எப்படிச் செத்தான் என்று கேட்டதுண்டா? நான் எப்படி போனேன்? எப்படி வந்தேன்? என்று கேட்டதுண்டா? கேட்க விருப்பம் இல்லை. எனது இதயக் குமுறலை நாட்குறிப்பில் எழுதி வைத்திருக்கிறேன். என்றாவதுஒருநாள் வெளியிடுவேன்.

பெப்ரவரி 8ஆம்திகதி தந்த கடிதத்தை மார்ச் மாதம் 3ஆம் திகதி வெளியிட்டீர்கள் அறிவாலயத்தில் என்னைப் பற்றிக் கடுமையான குற்றச்சாட்டு வெளியிட்டு இருந்தீர்கள் என்றார்.

இக் கூட்டத்தில் திருவண்ணாமலை நகரமக்கள் சார்பாக 51 ஆயிரம் ரூபாவை முன்னாள் எம்.பி. முருகையன் வை. கோபாலசாமியிடம் வழங்கினார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**07.02.1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 643

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

28-5484, 28-6853, 26-1791, 26-8430, 26-6309
22-4895, 22-2250, 24-5416, 24-5774, 24-6941
24-6431, 24-9744, 24-5258, 27-5217, 42-3329
41-9659, 42-0969, 42-9220.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42 3368, 24-9549, 41-9487, 40-1617, 24 9809
41-4129, 40-7583, 27-4023, 28-2385, 26-7187
27-7281, 28-1049, 26-7227.

## பகுதிநேர வேலை வாய்ப்பு

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் துறைகளில் பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு துறையிலும் ஆர்வமும், அனுபவமும் உள்ளவர்கள் தமக்கு எந்த நேரத்தில் பணிபுரிய வசதி உண்டு என்பதனைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம்.

1. செய்தி தொகுப்பாளர்
2. வானொலி நிகழ்ச்சி எழுத்தாளர்
3. வீடியோ பிரதி எழுத்தாளர் (குறும்படம், விவரணச் சித்திரம்)
4. ஓவியர்கள்/கருத்துப்படங்கள் வரைவோர்

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.02.1994

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல 311
(கி-8564) ஈழநாதம்.

## 90-ம் நாள் நினைவஞ்சலிகள்

08- 02- 94



பிறப்பு: 4. 06. 72

வீரச்சாவு: 11. 11. 93

### மேஜர் வித்தியா

தபோஜினி பாலசுப்பிரமணியம் (உமா)

தலைவன் வழி அணிதிரண்டு சென்றீர்கள்
ஈழநகர் எங்கணுமே கவிபாடித் திரிந்தீர்கள்
பூநகரித்தளம் மீது புயலாகிப் போனீர்கள்
- மாவீரர்
ஆன உமை வணங்குகிறோம் என்னாளும்.

''பூநகரியில் வீரச்சாவடைந்த அனைத்துப்போராளிகளுக்கும் எமது கண்ணீரஞ்சலிகள்.''

08- 02- 94 இன்று மேஜர் வித்தியாவின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர்களையும் நண்பர்களையும் சகபோராளிகளையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை றோட்
கோண்டாவில் கிழக்கு - குடும்பத்தினர்
(7448)

## 90-ம் நாள் நினைவலைகள்

பிறப்பு: 22 – 02 – 1973



வீரச்சாவு: 11 – 11 – 1993

[பூநகரி முகாம் தகர்ப்பு]

கடற் கரும்புலி

### மேஜர் கணேஸ்

[நாகநாதி-ஜீவநேசன்]

தமிழ்வாழ உயிரீந்து உரமான துளிரே
உனதாசை தமிழீழம் உருவாகும் இங்கே
உரமான துளிர் மீண்டும் மரமாகி இங்கே
பூவாகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியும்.

11-11-93 அன்று வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எங்கள் வீரவணக்கம்.

இங்ஙனம்
நவக்கிரி, நண்பர்கள்
புத்தூர். (7460)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ஆ. கணபதிநாதன்

அப்பாவை இழந்த எம்துயர் ஆற்றிய ஐயாவே
இத்துயர் ஆற்றுவது யார்?
எங்குடும்பம் ஏற்றமுற வாழ
ஏதமில் பணிகள் புரிந்த எந்தையே
இத்துயர் ஆறுவது எப்போ?

84, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பிரிவாற் துயருறும் அமரர் வ.பொன்னுத்துரை குடும்பம்.
(7461)

## திகதி நீடிப்பு

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தையல் பயிற்சி போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 10. 02. 94 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கானபரீட்சைக் கட்டணத்தை யாழ் பிரதேச செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிரதேச செயலர் அறிவிக்கிறார்.

## வறிய மக்களிற்கு விவசாயக் கடன்

வறிய விவசாயிகளை விவசாயச் செய்கையில் ஈடுபடுத்தும் பொருட்டு அவர்களை நிரந்தர விவசாயிகளாக்கும் நோக்குடனும் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கு தலா 6000 ரூபா வீதம் மொத்தம் 100 பயனாளிகளிற்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இக் கடனுதவி பணமாகவோ உள்ளீடுகளாகவோ கட்டங்கட்டமாக வழங்கப்படுகிறது உழவு, விஸ்தரிப்பு ஆகிய நடவடிக்கைகளின் போது பணமாகவும், உரம், கிருமிநாசினி என்பன பொருளாகவும் அறுவடையின் போது பணமாகவும் நான்கு கட்டங்களாக இக் கடன் வழங்கப்படுகிறது. இதனால் வறிய நிலையில் இருக்கும் விவசாயிகளும் நெற்செய்கையில் ஈடுபடக்கூடியதாயுள்ளது.

கடந்த வருடமும் 100 பயனாளிகளிற்கு இவ்விதம்கடன் வழங்கப்பட்டு 100 ஏக்கர் நிலம் நெற்செய்கைக்குட்படுத்தப்பட்டிருந்தது. மேலும் வறிய நிலமற்ற விவசாயிகளிற்கு பயிர்செய்வதற்கென தரிசுக் காணிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



### லெப். மலரோன் (சோபிதன்)

(அருமைநாயகம் முரளிதரன்)
(வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி)

12.11.1993 அன்று பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதலில இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து வீரவேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

நாளை (09-02-1994) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் இலட்சியத் தடங்களைத் தொடரும்

கோப்பாய் றோட்.
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

அம்மா: அ. திலகவதி,
அக்கா: அனுராதா,
தங்கை: அனுஷா.
(மதனிதா- போராளி)
(7452)

## பெற்றுக் கொள்ளவும்

01. 02. 94 அன்று இரவு வேளையில் யாழ்சென்ற பயணிகளான பாக்கியநாதர் மேரியோசப் ஆசிரியை என்பவரது மணிபேஸ்சுடன் கூடிய ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

R. பிரமானந்தர் 41|7 மானிப்பாய் றோட், யாழ். என்பவரது பாக்கும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர்கள் படகு சேவைப் பொறுப்பாளர், நல்லூர், பூநகரி என்ற விலாசத்தில் தகுந்தஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

ஃ ஃ ஃ

சு.மனோரஞ்சிதம், சு.சுகந்தினி(மல்லாகம்) ஆகியோரின் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதிச் சீட்டும் அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சர்மாவுக்கு கௌரவம்

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீபூதநாதசுவாமி தேவஸ்தான அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு 12 நாட்கள் தொடர்ந்து 'கந்த புராணம்' தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய நல்லைக்குருமணியின் பிரதம சிஷ்யன் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்

## 90-ம் நாள் நினைவஞ்சலி

## 90-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

## 2-ம் வருட நினைவு

(7448)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
30 - 03 - 1969

வீரச்சாவு:
11 - 11 - 1993

### லெப்டினன்ட் நீலவண்ணன்/தனம்
(கந்தையா மகேந்திரன்)

வல்வையிலே வந்துதித்த நீல வண்ணா
எம் நாட்டின் விடிவிற்காய்
வீடுவாசல் தேவையின்றி
போர்க் களங்கள் பல புகுந்தாய்
தவளை எனப் பெயரிட்ட
தலைவரின் அணியிலே
போர்க் களம் போனாயே
தீரமெனப் போரிட்டு
வீரமெனும் மரணத்தை
மேதினியில் பரவச் செய்தாய்;

உன் தியாகம் இம்மண்ணை வெளிச்சமாக்கும் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

இன்று 8-2-1994 எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

இமையாணன், - குடும்பத்தினர்.
உடுப்பிட்டி. (7456)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## 90-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

## 2-ம் வருட நினைவு



படைப்பு:

| 20 | 10 |
|---|---|
| 4 | 6 |
| 72 | 71 |

வீரச்சாவு:

| 11 | 16 |
|---|---|
| 11 | 6 |
| 93 | 91 |



2-ம். லெப் தமிழன்
(நடராசா (சட்டம்பி) தருமகுலசிங்கம்/இந்திரன்)
(பூநகரி-நாகதேவன்துறை சமரில் வீரச்சாவு)

2-ம் லெப். ரவி
(நடராசா (சட்டம்பி) கணேஸ்)
(வவுனியா பூவரசங்குளம் நேரடிமோதலில் வீரச்சாவு)

(வீரபத்திரர் கோயிலடி காங்கேசன்துறை)

**2-ம் லெப். தமிழனின் நினைவு நாள் 08,02.94 செவ்வாய்க்கிழமை**

அன்றையதினம் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
வல்லைவன் வீதி,
இணுவில்.

(7462)

சட்டம்பி குடும்பத்தினர்

புராணம்" தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய நல்லைக்குருமணியின் பிரதம சிஷ்யன் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அவர்கள் தமிழுக்கும், சைவத்திற்கும், கலைக்கும் செய்துவரும் சேவையைப் பாராட்டி ஆலய நிர்வாக அன்பர்களும் இந்து மாமன்றமும் சேர்ந்து சர்மாவுக்குப் பொன்னாடை போர்த்தி "அருள்மொழி இசை அரசு" என்ற பட்டமளித்து கௌரவித்தனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசிவழங்கி பொன்னாடை போர்த்தினார். உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. மகாலிங்கம் அவர்கள் சர்மாவுக்குப் பட்டம்வழங்கிப் பாராட்டிப் பேசினார்.

## விண்ணப்ப முடிவு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கணக்காய்வு பரீட்சகர் தரம் 11க்கு நியமனம் செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு இம்மாதம்18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பத் தவறியவர்கள் இம்மாதம் 15ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ தங்கள் விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கு விலாசமிட்டு அரச அதிபரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பரீட்சை பரீட்சை ஆணையாளரால் மீள அட்டவணைப்படுத்தி உள்ளவாறு இவ்வருடம் ஏப்பிரல் 2ஆம் திகதி தொடக்கம் கொழும்பில் நடைபெறவுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைபற்றிய விபரம் 1993 ஜூலை 23ஆம் திகதிய இலக்கம் 777கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (கி) (பா)